

சாம வேதத்தின்

வச்சிர சூசிகை உபநிடதம்

மூலமும் உரையும்.



இஃது
சித்தூர் மாவட்டம்
ஏகாம்பரக் குப்பம் பேட்டை
ஸ்ரீ சிவ சுப்பிரமணியர் மடாலயம்
நிறுவியவரும், அதிபதியும் ஆன;
வேத மொழிபெயர்ப்பு ஆசிரியர்
காசிவாசி

ஸ்ரீ. விர. சிவானந்த யதீந்திர சுவாமிகளால்

சமஸ்கிருதத்திலிருந்து
தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றது.

வெளியீடு :
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவானந்த யதீந்திர சுவாமிகள்
மடாலயம்
மூன்றும் மடாதிபதி

ஸ்ரீ. மகா. கோவிந்த சுவாமிகளால்

பதிப்பித்து வெளியீடு செய்யப்பெற்றது.
இரண்டாம் பதிப்பு.

1—7—1986

[விலை ரூ. 2-00



சாம வேதத்தின்

வச்சிர சூசிகை உபநிடதம்

மூலமும் உரையும்.

இஃது
சித்தூர் மாவட்டம்
ஏகாம்பரக் குப்பம் பேட்டை
ஸ்ரீ சிவ சுப்பிரமணியர் மடாலயம்
நிறுவியவரும், அதிபதியும் ஆன;
வேத மொழிபெயர்ப்பு ஆசிரியர்
காசிவாசி

ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளால்

சமஸ்கிருதத்திலிருந்து
தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றது.

வெளியீடு :
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவானந்த யதீந்திர சுவாமிகள் மடாலயம்
மூன்றும் மடாதிபதி

ஸ்ரீ. மகா. கோவிந்த சுவாமிகளால்

பதிப்பித்து வெளியீடு செய்யப்பெற்றது.
இரண்டாம் பதிப்பு.

1—7—1986

[விலை ரூ. 2-00

அ. 2

முதல் பதிப்பு 1934.
இரண்டாம் பதிப்பு 1-7-1986.

வெளியீடு :
ஸ்ரீ. சிவசுப்பிரமணிய சிவானந்த யதீந்திர சுவாமிகள் மடாலயம்.
K. V. P. R. பேட்டை.
(குமார வெங்கிடபெருமாள் ராஜாப் பேட்டை)
ஏகாம்பரக் குப்பம் போஸ்டு,
நகரி வட்டம், சித்தூர் மாவட்டம்.
(ஆந்திரா பிரதேசம்).
PIN. 517 592.

அச்சிட்டோர் :
சேகர் பிரிண்டர்ஸ்,
திருச்சி-2.

முதல் பதிப்பின், முகவுரை (சுருக்கம்).

உலகனைத்திற்கும் ஓர் ஒப்பற்ற முழுமுதற் கடவுள் உண்டு என்பது சமயகோடிகளுக்கெல்லாம் ஒப்பமுடிந்ததாமாயினும், அகிலாண்டகோடியெல் லாம் தன்பால் இருத்தி, முத்தொழில் செய்து, தழைத் தோங்கும் அத்திருவருளைப் பெற்று உய்ந்த பிரம்ம ஞானியரான, முனிவர், சித்தர் முதலியோர்களே காலம் நோக்கிக் கருணை மிகுதியால், மன்னுயிர்கட்கு இன்னுணர்வளித்து, நன்னெறியடைவித்துப், பேரின்பம் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கச் செய்தவர் கள் என்பது துணிபாம்.

ஆகவே அத்தகைய பிரம்ம ஞானியர்களின் இயல்பை அறிந்து, அவர்கள் அறிவித்த நன்னெறிப் படி ஒழுகுவது, மக்களின் உய்தியாகிய பேரின்பப் பெருவாழ்வுக்கு ஏதுவாகும்.

அத்தகைய பிரம்ம ஞானியர்களின் இயல்பை மிகவும் விளக்கிக் கூறுவது இந்த வச்சிர சூசிகை உபநிடதமாகும்.

இந்த வச்சிரசூசிகை உபநிடதம் கூறுவதின் கருத்துப் பொருள், பிரம்ம ஞானம் உண்டானவன் எவனோ அவன், பிரம்ம ஞானியாகவும், பிராமண னாகவும் ஆகிறான் என்பதாம்.

எல்லா வேதாந்த உபநிடதங்களின் கருத்துப் பொருளும் இதுவேயாகும்; என்பது பேரறிஞர்கள் யாவரும் அறிந்ததேயாகும்.

ஆதலால் இத்தகைய பிரம்ம ஞானியர்களின் இயல்பைக் குறித்த விசேட விபரங்களை மிகவும் விளக்கிக்கூறியறிவிக்கும், இந்த வச்சிர சூசிகை உபநிடதத்தைத் தமிழில் மொழி பெயர்த்து, ஸ்ரீ. சுவாமி அருணகிரிநாதர் அவர்கள் மடாதிபதியாக உள்ள, சென்னை அகத்திய குருகுலம் ஸ்ரீ. நாராயணதேசிகர் மடாலயத்திற்குப் பதிப்புரிமை வழங்கியிருக்கிறேன்.

இங்ஙனம்,

ஸ்ரீமுகஹு தைமீ 1934

வேத மொழிபெயர்ப்பு ஆசிரியர்
காசிவாசி
வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள்.

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

முதல் பதிப்பின் முகவுரையில் ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகள், "இந்த வச்சிர சூசிகை உபநிடதம் கூறுவதின் கருத்துப் பொருள், பிரம்ம ஞானம் உண்டானவன் எவனோ, அவன் பிரம்ம ஞானியாகவும், பிராமணனாகவும் ஆகிறான்; என்பதாம். எல்லா வேதாந்த உபநிடதங்களின் கருத்துப் பொருளும் இதுவேயாகும்; என்பது பேரறிஞர்கள் யாவரும் அறிந்ததேயாகும்." என்று கூறிய கருத்துப் பொருளே, ஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கர பகவத்பாத ஆசாரிய சுவாமிகள் அருளிய "மனீஷா பஞ்சகம்" என்னும் நூலில் கூறியுள்ளனர் என்பது பேரறிஞர்கள் யாவரும் அறிந்ததேயாகும்.

ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகள் முதல் பதிப்பின் பதிப்புரிமையை, சென்னை அகத்திய குருகுலம் ஸ்ரீ நாராயண தேசிகர் மடாலயத்திற்கு வழங்கியபடி, இம்மடாலயத்தின் மடாதிபதி ஸ்ரீ. சுவாமி அருணகிரிநாதர் அவர்களால், 1934ஆம் ஆண்டு முதல் பதிப்பாகப் பதிப்பித்து வெளியீடு செய்யப்பெற்றது.

மேற்படி நாராயண தேசிகர் மடாலயத்தின் தற்கால மடாதிபதி ஸ்ரீ சுவாமி ஞானனந்தா அவர்கள், மேற்படி வச்சிர சூசிகை உபநிடதத்தின்,

தமிழ் மொழிபெயர்ப்பின் பதிப்புரிமையை இப்போது, ஏகாம்பரக்குப்பம் பேட்டை, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவானந்த யதீந்திர சுவாமிகள் மடாலயத்திற்கு வழங்கியிருக்கிறூர்கள்.

ஆகவே இப்போது 1986ஆம் ஆண்டு ஏகாம்பரக் குப்பம்பேட்டை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவானந்த யதீந்திர சுவாமிகள் மடாலய வெளியீடு இந்த இரண்டாம் பதிப்பாகப் பதிப்பித்து வெளியீடு செய்யப்பெறுகிறது.

ஸ்ரீ சிவசுப்பிரமணிய
சிவானந்த யதீந்திர
சுவாமிகள் மடாலயம்.
ஏகாம்பரக் குப்பம்
பேட்டை.
சித்தூர் மாவட்டம்.
(ஆந்திரா பிரதேசம்.)
1-7-1986.

இங்ஙனம்,
மகா. கோவிந்த சுவாமி.
3. ஆம் மடாதிபதி.

பொருளடக்கம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

॥ ॐ ॥

॥ वज्रसूचिकोपनिषत् ॥

॥ शान्तिः॥

ॐ आप्यायन्तु ममाङ्गानि वाक् प्राणश्चक्षुः श्रोत्रमथो बलमिन्द्रियाणि च ॥ सर्वाणि सर्वं ब्रह्मोपनिषदं माहं ब्रह्म निराकुर्यां मा मा ब्रह्म निराकरोदनिराकरणमस्त्वनिराकरणमस्तु तदात्मनि निरते य उपनिषत्सु धर्मास्ते मयि सन्तु ते मयि सन्तु ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

॥ स्तोत्रम् ॥

यज्ज्ञानाद्यान्ति मुनयो ब्राह्मण्यं परमाद्भुतम् ।
तत्त्रैतद् ब्रह्मतत्त्वमहमस्मीति चिन्तये ॥

चित्सदानन्दरूपाय सर्वधीवृत्तिसाक्षिणे ।
नमो वेदान्तवेद्याय ब्रह्मणेऽनन्तरूपिणे ॥

॥ उपनिषत् ॥

ॐ वज्रसूचीं प्रवक्ष्यामि शास्त्रमज्ञान भेदनम् ।
दूषणं ज्ञानहीनानां भूषणं ज्ञानचक्षुषाम् ॥ १ ॥

ब्राह्मक्षत्रियवैश्यशूद्रा इति चत्वारो।
वर्णास्तेषां वर्णानां ब्राह्मण एव॥
प्रधान इति वेदवचनानुरूपं स्मृतिभिरप्युक्तम्॥ २॥

तत्र चोद्यमस्ति को वा ब्राह्मणो।
नाम किं जीवः किं देहः किं जातिः।
किं ज्ञानम् किं कर्म किं धार्मिक इति॥ ३॥

तत्र प्रथमो जीवो ब्राह्मण इति चेत्तन्न। अतीतानागतानेकदेहानां जीवस्यैकरूपत्वात् एकस्यापि कर्मवशादनेकदेहसंभवात् सर्वशरीराणां जीवस्यैकरूपत्वाच्च। तस्मान्न जीवो ब्राह्मण इति॥ ४॥

तर्हि देहो ब्राह्मण इति चेत्तन्न। आचाण्डालादिपर्यन्तानां मनुष्याणां पाञ्चभौतिकत्वेन देहस्यैकरूपत्वाज्जरामरण धर्माधर्मादिसाम्यदर्शनाद्ब्राह्मणः श्वेतवर्णः क्षत्रियो रक्तवर्णो वैश्यः पीतवर्णः शूद्रः कृष्णवर्ण इति नियमाभावात्। पित्रादिशरीरदहने पुत्रादीनां ब्रह्महत्यादिदोषसंभवाच्च तस्मान्न देहो ब्राह्मण इति॥ ५॥

तर्हि जातिर्ब्राह्मण इति चेत्तन्न । तत्र जात्यन्तरजन्तुष्वनेक जातिसंभवा महर्षयो बहवः सन्ति ।

ऋष्यशृङ्गो मृग्याः कौशिकः कुशात्, जाम्बूको जम्बूकात्, वाल्मीको वल्मीकात्, व्यासः कैवर्तकन्यकायाम्, शशपृष्ठात् गौतमः, वसिष्ठ उर्वश्याम्, अगस्त्यः कलशे जात इति श्रुतत्वात् ।

एतेषां जात्या विनाप्यग्रे ज्ञानप्रतिपादिता ऋषयो बहवः सन्ति । तस्मान्न जातिर्ब्राह्मण इति ॥ ६ ॥

तर्हि ज्ञानं ब्राह्मण इति चेत्तन्न । क्षत्रियादयोऽपि परमार्थदर्शिनोऽभिज्ञा बहवः सन्ति । तस्मान्न ज्ञानं ब्राह्मण इति ॥ ७ ॥

तर्हि कर्म ब्राह्मण इति चेत्तन्न । सर्वेषां प्राणिनां प्रारब्धसंचितागामिकर्मसाधर्म्यदर्शनात्कर्माभिप्रेरिताः सन्तो जनाः क्रियाः कुर्वन्तीति । तस्मान्न कर्म ब्राह्मण इति ॥ ८ ॥

तर्हि धार्मिको ब्राह्मण इति चेत्तन्न । क्षत्रियादयो हिरण्यदातारो बहवः सन्ति । तस्मान्न धार्मिको ब्राह्मण इति ॥ ९ ॥

तर्हि को वा ब्राह्मणो नाम । यः कश्चिदात्मानमद्वितीयं जातिगुणक्रियाहीनं षडूर्मिषड्भावेत्यादिसर्वदोषरहितं सत्यज्ञानानन्दानन्तस्वरूपं स्वयं निर्विकल्पमशेषकल्पनाधारमशेषभूतान्तर्यामित्वेनवर्तमानमन्तर्बहिश्चाकाशवदनुस्यूतमखण्डानन्दस्वभावमप्रमेयमनुभवैकवेद्यमपरोक्षतया भासमानं करतलामलकवत्साक्षादपरोक्षीकृत्य कृतार्थतया कामरागादिदोषरहितः शमदमादिसंपन्नो भावमात्सर्यतृष्णाशामोहादिरहितो दम्भाहङ्कारादिभिरसंस्पृष्टचेता वर्तते एवमुक्तलक्षणो यः स एव ब्राह्मण इति श्रुतिस्मृतिपुराणेतिहासानामभिप्रायः ॥ अन्यथा हि ब्राह्मणत्वसिद्धिर्नास्त्येव ॥ १० ॥

सच्चिदानन्दमात्मानमद्वितीयं ब्रह्म भावयेदात्मानं सच्चिदानन्दं ब्रह्म भावयेदित्युपनिषत् ॥ ११ ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

உ

ஓம் தத் ஸத்

(சர்வ வேதாதி சாஸ்திரங்களும்
பிரம்ம ஞானியே பிராமணன்
எனக் கூறுகின்றன;
என்று விளக்கிக்கூறிச் சகலருக்கும் அறிவிக்கும்,)

சாம வேதத்தின்

★ வச்சிர சூசிகை யுபநிடதம்

மூலமும் உரையும்.

சா ந் தி :

ஓம். ஆப்யாயந்து மமாங்காநி வாக் ப்ராணஸ் சட்சு: ச்ரோத்திர மதோ பலமிந் த்ரியாணிச சர்வாணி; சர்வம் ப்ரஹ்ற மோபநிஷதம், மாஹம் ப்ரஹ் மநிராகுர்யாம். மாமாப்ரஹ்மநிரா கரோத். அநிராகரணமஸ்து; அநிராகரணமஸ்து; ததாத்மநி நிரதே ய உபநிஷத்சு தர்மாஸ் தே மயி சந்து தே மயிசந்து.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

(இதன் பொருள்)

ஓம். எனது அங்கங்களைப் பாதுகாப்பாற்றுக. வாக்கு பிராணன் கண் சுரோத்திரம் மற்றும் ஆற்றலுள்ள இந்திரியங்கள் அனைத்தையும்; சர்வம் பிரம உபநிடதம், பிரமத்தை யான் விலக்கேன். பிரமம் என்னைத் தள்ளிவிடற்க. விலக்காமையுளதாக; விலக்காமை யுளதாக; அவ்வான்மாவிலொருப்பட்ட உபநிடதங்களிலுள்ள தருமங்களெவையோ அவை என்பால் உளதாக அவை என்பால் உளதாக.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

★ 108. உபநிடதங்களின் வரிசையில் -
இது 36ஆம் உபநிடதம் ஆகும்,

உ

சாம வேதத்தின்

வச்சிர சூசிகை யுபநிடதம்

மூலமும் உரையும்.

பிரஹ்ம ஸ்தோத்ரம்.

யக்ஞாநாத் யாந்தி முநயோ ப்ராஹ்மண்யம் பரமாத்புதம்
தத்ரைதத் ப்ரஹ்ம தத்வ மஹமஸ்மீதி சிந்தயே.

இதற்குத் தமிழ்க் கவி.

எழின்மிகு முனிவர் முன்பு
எதையுளத்(து) உணர்த லாலே
அழிவறு வியப்பு வாய்ந்த
அந்தணத் தன்மை ஏய்ந்தார்
ஒழிவ(று)இப் பிரமந் தன்னை
ஒழி(வு)இலா(து) இலங்கும் மாயை
இழிதர யான்என்(று) உன்னி
இதயத்தில் இருத்தி வாழ்வாம்.

சித் சதானந்த ரூபாய சர்வதீ வ்ருத்திசாக்ஷிணே
நமோ வேதாந்த வேத்யாய ப்ரஹ்மணே அநந்தரூபிணே.

இதற்குத் தமிழ்க் கவி.

உள(து)ஒளி இனிய(து) என்னும்
உருவம(து) ஆகி மற்றும்
கிளர்மதி விருத்தி கட்குக்
கில(ம்)அறு சாட்கி ஆகி
அள(வு)அறு மறையின் சென்னி
அறிந்திடப் பொருந்தி என்றும்
வளர்தரும் அனந்தம் என்னும்
பிரமத்தை வணங்கு வாம்ஆல்.

உபநிடதத் தொடக்கம்

வாக்கிய எண். — மந்திரம்

1. ஓம் வஜ்ர சூசிம் ப்ரவக்ஷ்யாமி சஸ்த்ர மஞ்ஞான பேதனம்
தூஷணம் ஞானஹீநாநாம் பூஷணம் ஞானசக்ஷுஷாம்

பதவுரை

ஞானசக்ஷுஷாம்	ஞானக்கண்ணுடையாருக்கு
பூஷணம்	துதியும்
ஞானஹீநாநாம்	ஞானக்கண்ணிலாருக்கு
தூஷணம்	பழிப்பும்
அஞ்ஞானபேதனம் சஸ்த்ரம்	அஞ்ஞானத்தை யழிக்கும் [ஆயுதமுமாகிய
வஜ்ரசூசிம்	வச்சிரசூசிகை [உபநிடதத்தை
ப்ரவக்ஷ்யாமி.	இனிது கூறுகின்றேன்.

பொழிப்புரை

மெய்ஞ்ஞானக் கண்ணுடையாருக்கு அலங்காரமாகவும், உண்மையறிவாகிய கண்ணில்லாதவருக்குப் பழிப்பாயும், அஞ்ஞானத்தை யறுக்கின்ற வாளாகவும் உள்ள வச்சிரசூசிகை யென்னும் உபநிடதத்தை நன்கு சொல்கின்றேன். (1)

வாக்கிய எண்.

2. ப்ரஹ்ம க்ஷத்ரிய வைஸ்ய சூத்ரா இதி சத்வாரோ வர்ணா: தேஷாம் வர்ணநாம் ப்ராஹ்மண ஏவ ப்ரதான இதி வேதவசநா நுரூபம் ஸ்ம்ருதிபிரப்யுக்தம்.

பதவுரை

ப்ரஹ்ம	பிராமணன் (அந்தணன்)
க்ஷத்ரிய	க்ஷத்திரியன் (அரசன்)
வைஸ்ய	வைசியன் (வணிகன்)
சூத்ரா	சூத்திரன் (வேளாளன்)
இதிசத்வாரோ வர்ணா:	என நான்கு சாதியர் உளர்
தேஷாம் வர்ணாநாம்	அச்சாதியார்களுள்
ப்ராஹ்மண ஏவ	பிராமணனே
ப்ரதான இதி	முக்கியனென்று
வேத வசநா நுரூபம்	வேத வாக்கைப் போன்று
ஸ்ம்ருதிபி: அப்யுக்தம்.	ஸ்மிருதிகளாலுங் கூறப் [பட்டிருக்கின்றது.

பொழிப்புரை

பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு வருணத்தவர்க ளிருக்கின்றனர். அவர்களுள் பிராமணனே சிறந்தவன் என வேதங் கூறுவது போல் ஸ்மிருதிகளுங் கூறுகின்றன என்பதாம். (2)

வாக்கிய
எண்.

3. தத்ர சோத்ய மஸ்தி, கோவா ப்ராஹ்மணோ நாம? கிம் ஜீவ:? கிம் தேஹ:? கிம் சாதி:? கிம்ஞானம்? கிம் கர்ம? கிம் தார்மிக?இதி.

பதவுரை

தத்ர	அவ்விடயத்தில்
சோத்ய மஸ்தி	வினவ வேண்டியதுண்டு
கோவா ப்ராஹ்மணோ [நாம?	பிராமணன் யாவன்?
கிம் ஜீவ:?	சீவனா?
கிம் தேஹ:?	உடம்பா?

கிம் ஜாதி:?	சாதியா?
கிம் ஞானம்?	ஞானமா?
கிம் கர்ம?	கருமமா?
கிம் தார்மிக?	தருமஞ் செய்பவனா?
இதி.	என்பது.

பொழிப்புரை

பிராமணனே சிறந்தவன் என்றதில் வினாக் களுண்டு. அவை, பிராமணத் தன்மை யென்பது சீவனா? அல்லது தேகமா? அல்லது சாதியா? அல்லது ஞானமா? அல்லது கருமமா? அல்லது தருமமா? என்பன. (3)

வாக்கிய
எண்.

4. தத்ர ப்ரமோ ஜீவோ ப்ராஹ்மண; இதி சேத்தந்ந, அதீதா நாகதாநே கதேஹாநாம் ஜீவஸ்யைக ரூபத்வாத் ஏகஸ்யாபி கர்மவசாத் அகே தேஹ சம்பவாத் சர்வ சரீராணும் ஜீவஸ்யைகரூபத் வாச்ச தஸ்மாந் ந ஜீவோ ப்ராஹ்மண: இதி.

பதவுரை

தத்ர	அவற்றுள்
ப்ரதமோ	முதலாவது
ஜீவோ ப்ராஹ்மண;	சீவன் பிராமணன்
இதிசேத்தந்ந	என்பது கூடாது
அதீதா	போனவைகளும்
அநாகத	வருபவைகளுமான
அநேக தேஹாநாம்	அநேக தேகங்களில்
ஜீவஸ்ய	சீவன்
ஏக ரூபத்வாத்	ஒரே வடிவனாதலின்


கர்ம வசாத் — கரும வசத்தினுல்
ஏகஸ்யாபி — ஒரே சீவனுக்கும்
அநேகதேஹ — பலவிதமான சரீரங்கள்
சம்பவாத் — பொருந்து மாதலின்
சர்வ சரீராணும் — எல்லாச் சரீரங்களிலும்
ஜீவஸ்ய — சீவன்
ஏகரூபத்வாச்ச — ஒரே வடிவனுதலானும்
தஸ்மாத் — ஆகையால்
ஜீவோப்ராஹ்மண; — சீவனே பிராமணன்
இதி ந: — என்பதில்லை.

பொழிப்புரை

போனவைகளும் வருபவைகளுமான அநேக தேகங்களிலும் சீவன் ஒருவனே யாதலாலும், ஒரே சீவன் கரும வசத்தால் அநேக தேகங்களை யடைதலாலும், தேகங்கலெல்லாவற்றிலுமுள்ள சீவன் ஒருவனே யாவனுதலாலும், சீவனே பிராமணன் என்னும் முதற்பட்சம் பொருந்தாது. (4)

வாக்கிய
எண்.

5. தர்ஹி தேஹோ ப்ராஹ்மண இதிசேத் தந்ந. ஆ சண்டாளாதிபர்யந்தாநாம் மநுஷ்யாணும் பாஞ்ச பௌதிகத்வேந தேஹஸ்ய ஏகரூபத்வாத் ஜராமரண தர்மாதர்மாதி சாம்ய தர்சநாத் ப்ராஹ்மண: ஸ்வேதவர்ண: க்ஷத்ரியோ ரக்தவர்ணே வைஸ்ய: பீதவர்ண: சூத்ர: க்ருஷ்ணவர்ண இதி நியமா பாவத் பித்ராதி சரீரதஹநே புத்ராதீநாம் ப்ரஹ்மஹத்யாதி தோஷ சம்பவாச்ச தஸ்மாந் ந தேஹோ ப்ராஹ்மண இதி.



பதவுரை

தர்ஹி	அங்ஙனமாயின்
தேஹோப்ராஹ்மண:	தேகமே பிராணன்
இதிசேத் தந்ந	என்பதுவுமில்லை
ஆ சண்டாளாதி பர்யந்தாநாம் மநுஷ்யாணும்	சண்டாளன் முதல் (பிராமணன்) ஈருன மனிதர்களுக்கும்
பாஞ்சபௌதிகத்வேந	பஞ்ச பூதங்களின் காரியமாந்தன்மையால்
தேஹஸ்ய ஏகரூபத்வாத்	தேகம் ஒருவடிவானாலும்
ஜராமரண	மூப்பிறப்பு
தர்மாதர்மாதி	புண்ணியபாவம் முதலியன
சாம்யதர்சநாத்	ஒப்பாய்க் காணப்படலானும்
ப்ராஹ்மண: ஸ்வேதவர்ண:	பிராமணன் வெண்மைநிறமுடையவன்
க்ஷத்ரியோ ரக்தவர்ண:	க்ஷத்திரியன் சிவப்புநிறமுடையவன்
வைஸ்ய: பீதவர்ண:	வைசியன் மஞ்சள் நிறமுடையவன்
சூத்ர: க்ருஷ்ணவர்ண:	சூத்திரன் கறுப்பு நிறமுடையவன்
இதிநியமா பாவாத்	என்னும் நியமங் கூடாமையானும்
பித்ராதி	தந்தைமுதலியவர்களின்
சரீர தஹநே	உடம்பைச் சுடில்
புத்ரா தீநாம்	(அவர்களுடைய)புத்திரன் முதலியோர்களுக்கு
ப்ரஹ்ம ஹத்யாதி	பிராமணனைக் கொல்லல் முதலான

தோஷ சம்பவாச்ச — தோஷம் பொருந்தலானும்
தஸ்மாத் — ஆகையால்
ந தேஹோ ப்ராஹ்மண இதி, — தேகம் பிராமணன் என்பதும்பொருந்தாது.

பொழிப்புரை

சண்டாளன் முதல் பிராமணன்வரை எல்லா மனிதர்களுக்கும் பஞ்சபூதங்களின் காரியமாய் தேகம் ஒரே தன்மையாமாதலானும், மூப்பு, இறப்பு, புண்ணியம், பாவம், முதலியன யாவர்கட்கும் ஒப்பாகவே காணப்படலானும், வெண்மை நிறத்தன் பிராமணன், சிவப்பு நிறத்தன் க்ஷத்திரியன், மஞ்சள் நிறமுடையவன் வைசியன், கருநிறத்தன் சூத்திரன், என்னும் நியத மின்மையானும், புத்திரன் முதலானோர், தங்களுடைய பிதா முதலியவர்களின் உடம்பைச் சுடுங்கால் அவர்களுக்குப் பிராமணனைக் கொல்லுதல் முதலிய தோடம் வருதலானும், தேகம் பிராமணன் என்பதும் பொருந்தாது. (5)

வாக்கிய எண். (6. முன் பகுதி)

6. தர்ஹி ஜாதிர் ப்ராஹ்மண இதிசேத்தந்ந தத்ர ஜாத்யந்தர ஜந்து ஷ்வநேக ஜாதி சம்பவா மஹர்ஷயோ பஹவ: சந்தி.

பதவுரை

தர்ஹி — அவ்வண்ணமாயின்
ஜாதிர்ப்ராஹ்மண: — சாதியே பிராமணன்
இதி சேத்தந்ந — என்பதும் பொருந்ாது
தத்ர — அதில்
ஜாத்யந்தர ஜந்துஷு — வேறு சாதியுடைய பிராணிகளிடத்து

அநேக ஜாதி சம்பவா:	பலவகைச் சாதியாய்ப் பிறந்த
மஹர்ஷய:	மகரிஷிகள்
பஹவ: சந்தி.	அநேகர் இருக்கின்றார்கள்

பொழிப்புரை

தேகம் பிராமணன் அன்றெனினும் சாதியே பிராமணனாகானோவெனின்? அதுவும் பொருந்தாது. என்னை? வேறு சாதி யுடைய விலங்குகளிற் பிறந்த பலவகைச் சாதியுடைய மகரிஷிகள் பலர்களிருக்கின்றார்க ளாதலின். (6. முன்)

வாக்கிய எண். (6. நடுப் பகுதி)

6. ரிஷ்யச்ருங்கோ ம்ருக்யா: கௌசிக: குசாத், ஜாம்பூகோ ஜம்புகாத், வால்மீகோ வல்மீகாத், வ்யாஸ: கைவர்த்த கன்னியகாயாம், சசப்ருஷ்டாத் கௌதம:, வசிஷ்ட உர்வஸ்யாம், அகஸ்த்ய: கலசே ஜாத இதி சுருதத் வாத்.

பதவுரை

ரிஷ்யச்ருங்க:	கலைக்கோட்டு மஹர்ஷி
ம்ருக்யா:	மான் வயிற்றிற் பிறந்தவர்
கௌசிக: குசாத்	கௌசிகர் தருப்பையிற் பிறந்தவர்
ஜாம்பூக:	சாம்பூக ரிஷி
ஜம்பூ காத்	நரியிற் பிறந்தவர்

வால் மீ க:	வால்மீகி ரிஷி
வல் மீ காத்	புற்றிற் பிறந்தவர்
வ்யாஸ:	வியாசர்
கைவர்த்தகன்னிய காயாம்	மீன் வாணியப்பெண்ணிற் பிறந்தவர்
கௌதம:	கௌதம முனிவர்
சசப்ருஷ்டாத்	முயலின் பின் புறத்திற் பிறந்தவர்
வசிஷ்ட:	வசிஷ்டர்
உர்வஸ்யாம்	ஊர்வசி தாசியினிடத்திற் பிறந்தவர்
அகஸ்த்ய:	அகஸ்தியர்
கலசே ஜாத:	குடத்தில் பிறந்தவர்
இதி ஸ்ருதத்வாத்.	எனக் கேட்கப் படலால்.

பொழிப்புரை

கலைக்கோட்டுமஹர்ஷி மானிலும், கௌசிகர் தருப்பையிலும், சாம்பூகர் நரியிலும், வால்மீகி புற்றிலும், வியாசர் மீன் புல்லரின் கன்னியினிடத்தும், கௌதமர் முயலின் பின்புறத்திலும், வசிட்டர் ஊர்வசியினிடத்தும், அகத்தியர் குடத்திலும் பிறந்தார், என சாத்திரங்கள் கூறுகின்றன வாகலின் என்பதாம். (6. நடு)

வாக்கிய எண். (6. பின் பகுதி)

6. ஏதேஷாம் ஜாத்யா விநாப் யக்ரே ஞானப்ரதி பாதிதாரிஷயோ பஹவ: சந்தி தஸ்மாந் ந ஜாதிர் ப்ராஹ்மண இதி.

பதவுரை

ஏதேஷாம்	இவர்களுக்குள்
ஜாத்யா விநாபி	சாதி யில்லாமலும்
அக்ரே	முன் காலத்தில்
ஞானப்ரதிபாதிதா	ஞானிகளெனச் [சொல்லப்பட்ட
ரிஷய:	ரிஷிகள்
பஹவ: சந்தி	அநேகர் இருக்கின்றார்கள்
தஸ்மாத்	ஆகையால்

ந ஜாதி:ப்ராஹ்மண இதி. சாதி பிராமணன் அன்று.

பொழிப்புரை

இவர்களை,சாதி யில்லாமலே முன்னர் தத்துவ ஞானிக ளென சாத்திரங்களிற் கூறப்பட்டிருத்தலின், சாதியே பிராமணன் என்பதுங் கூடாது. (6. பின்)

வாக்கிய
எண்.

7. தர்ஹி ஞானம் ப்ராஹ்மண இதிசேத் தந் ந க்ஷத்ரியாத யோபி பரமார்த்த தர்சின: அபிஞ்ஞா பஹவ: சந்தி தஸ்மாந் ந ஞானம் ப்ராஹ் மண இதி.

பதவுரை

தர்ஹி	அன்றேல்
ஞானம் ப்ராஹ்மண:	ஞானமே பிராமணன்

இதி சேத்	என்னி லோ
தந் ந	அதுவு மன்று
க்ஷத்ரியாதயோபி	க்ஷத்திரியன் [முதலியவர்களும்
பரமார்த்த த்ர்சின:	பரம்பொருளையுணர்ந்த
அபிஞ்ஞா:	தத்துவஞானிகள்
பஹவ: சந்தி	அநேகரிருக்கின்றார்கள்
தஸ்மாத்	ஆகையால்
ந ஞானம் ப்ராஹ்மண இதி.	ஞானம் பிராமணன் [அன்று.

பொழிப்புரை

அஃதின்றேல் ஞானமே பிராமணன் என்பதும் பொருந்தாது. என்னை? பரம் பொருளையுணர்ந்து தத்துவஞானிகளாய் அநேக க்ஷத்திரியர்களு மிருக்கின்றார்களாதலின் என்பதாம். (7)

வாக்கிய
எண்.

8. தர்ஹி கர்ம ப்ராஹ்மண இதி சேத் தந். ந. சர்வேஷாம் ப்ராணிநாம் ப்ராரப்த சஞ்சிதாகாமி கர்ம சாதர்ம்ய தர்சனத். கர்மாபி: ப்ரேரிதா: சந்தோ ஜநா: க்ரியா: குர்வந்தீதி தஸ்மாந் ந கர்ம ப்ராஹ்மண இதி.

பதவுரை

தர்ஹி	ஆனல்
கர்ம ப்ராஹ்மண:	கருமமே பிராமணன்

இதி சேத்தந் ந	என்னிலோ, அதுவுமன்று
சர்வேஷாம் ப்ராணிநாம்	எல்லாப் பிராணிகளுக்கும்
ப்ராரப்த சஞ்சிதாகாமி	பிராரத்தம், சஞ்சிதம், [ஆகாமியம் என்னும்
கர்ம சாதர்ம்ய தர்சனுத்	கருமங்கள் சமமாகக் [காணப்படுதலானும்
கர்மாபி:	கருமங்களால்
அபிப்ரேரிதா: சந்த:	செலுத்தப் பட்டவர்களாய்
ஜநா:	சனங்கள்
க்ரியா: குர்வந்தி	தொழில்களைச் [செய்கின்றூர்கள்
இதி தஸ்மாத்	என்னும் அக் [காரணத்தாலும்
ந கர்ம ப்ராஹ்மண இதி.	கருமம் பிராமணன் [என்பதும் பொருந்தாது.

பொழிப்புரை

பிராணிகளனைத்திற்கும் பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமியம், என்னுங் கருமங்கள் ஒரே தன்மையாய்க் காணப்படுதலானும், சனங்கள் கருமங்களா லேவப் பட்டு தொழில்களைச் செய்கின்றூர்களாதலாலும், கருமமே பிராமணன் என்பதும் ஒவ்வாது. (8)

வாக்கிய
எண்.

9. தர்ஹி தார்மிகோ ப்ராஹ்மண இதிசேத் தந்ந, க்ஷத்ரியாதயோ ஹிரண்யதாதாரோ பஹவ: சந்தி.
தஸ்மாந் ந தார்மிகோ ப்ராஹ்மண இதி.

பதவுரை

தர்ஹி	அற்றேல்
தார்மிக:	தருமஞ் செய்வோன்
ப்ராஹ்மண இதிசேத்	பிராமணன் என்னிலோ
தந் ந	அதுவும் அமையாது
க்ஷத்ரியாதய:	க்ஷத்திரியன் [முதலியோர்கள்
ஹிரண்யதாதார:	பொன் தானஞ் செய்கின் [றவர்கள்
பஹவ: சந்தி	அநேகர் இருக்கின்றுர்கள்
தஸ்மாத்	ஆகையால்
தார்மிக:	தர்ம முடையோன்
ப்ராஹ்மண; இதி ந.	பிர்ாமணனென்பதும் [ஒவ்வாது.

பொழிப்புரை

ஆனுல் தருமம் செய்வோன் பிராமணன் எனலாமோ எனின்? அதுவும் பொருந்தாது. பொன் தானஞ் செய்தல் முதலிய தருமஞ் செய்கின்ற க்ஷத்திரியர் முதலியோர்களும் பலர்க ளிருக்கின்றுர்களாதலின், தருமஞ் செய்கின்றவனே பிராமணன் என்பதும் பொருத்தமன்று. (9)

வாக்கிய
எண்.

10. தர்ஹி கோவா ப்ராஹ்மணோ நாம? ய: கச்சித் ஆத்மாநமத்விதீயம் ஜாதி குணக்ரியாஹீநம்,

ஷடுர்மி ஷட்பா வேத்யாதி சர்வ தோஷ ரஹிதம், சத்ய ஞாநாநந்தானந்த ஸ்வரூபம், ஸ்வயம்நிர் விகல்பம், அசேஷ கல்பநாதாரம், அசேஷ பூதாந்தர்யாமித்வேந வர்தமாநம், அந்தர் பஹிஸ்சாகாசவதநுஸ்யூதம், அகண்டானந்த ஸ்வபாவம், அப்ரமேயம், அநுபவைக வேத்யம், அபரோட்ச தயா பாசமாநம், கரதலாமலகவத் சாட்சாதபரோக்ஷீ க்ருத்ய க்ருதார்த்த தயா காம ராகாதி தோஷரஹித: சமதமாதி சம்பந்நோ பாவ மாத்ஸர்ய த்ருஷ்ணசா மோஹாதி ரஹிதோ தம்பாஹங்காராதிபிரசம் ஸ்ப்ருஷ்ட சேதா வர்ததே ஏவ முக்த லட்சணோ ய: ஸஏவ ப்ராஹ்மண இதி ஸ்ருதி ஸ்ம்ருதி புராணேதிஹாசாநாமபிப்ராய: அந்ய தாஹி ப்ராஹ்மணத்வ ஸித்திர் நாஸ்த்யேவ.

பதவுரை

தர்ஹி	அஃதின்றேல்
கோவா ப்ராஹ்மணோ நாம?	பிராமணன் என்பவன் யாவன்?
ய: கஸ்சித்	யாவனொருவன்
அத்விதீயம்	அத்துவிதமாயும்
ஜாதி குணக்ரியாஹீநம்	சாதி, குணம், கிரியை அற்றதும்
ஷடூர்மி	இன்பதுன்பமுதலிய ஆறு அலைகள்
ஷட்பாவ	பிறப்பு முதலிய அறு விகாரங்கள்

இத்யாதி	இவை முதலிய
சர்வதோஷ ரஹிதம்	தோஷங்களற்றதும்
சத்ய ஞானந்தானந்த ஸ்வரூபம்	சச்சிதானந்த அனந்த [வடிவும்
ஸ்வயம் நிர்விகல்பம்	இயல்பாய் விகற்ப மற்ற [தும்
அசேஷ கல்பநாதாரம்	எல்லா ஆரோபத்திற்கும் [அதிட்டானமும்
அசேஷ பூதாந்தர்யாமித் [வேந	எல்லாப் பூதங்களினுள்ளீ [டாய்
வர்த்மாநம்	இருக்கிறதும்
அந்தர் பஹிஸ்ச	உள்ளும் புறம்பும்
ஆகாஸ வத்	ஆகாசத்தைப் போன்று
அநுஸ்யூதம்	நிறைந் திருப்பதும்
அகண்டா நந்தஸ்வ [பாவம்	நீக்கமிலாவின்பவியல் [பினதும்
அப்ரமேயம்	பிரமாணத்தா லறியப்படா [ததும்
அநுபவைக வேத்யம்	அநுபவமொன்றினாலேயே [யறியத் தக்கதும்
அபரோட்சதயா பாசமா [நம்	அபரோட்சமாக விளங்குவ [துமாகிய
ஆத்மாநம்	ஆன்மாவை
கரதலா மலகவத்	உள்ளங்கை நெல்லிக் கனி [போன்று

சாட்சா தபரோட்சீக்ருத்ய	நேராயுணர்ந்து
க்ருதார்த்ததயா	செய் பயனடைந்த [தன்மையால்
காமராகாதி	காமம் இச்சை முதலிய
தோஷரஹித:	தோஷமின்றியவனும்
சமதமாதி சம்பந்ந:	சமதம முதலியவைகளை [யுடையவனும்
பாவமாத்ஸர்ய	பொருமை எண்ணம்
த்ருஷ்ணாசா	மூவேடணை இச்சை
மோஹாதிரஹித:	மோக முதலியன அற்றவ [னும்
தம்பாஹங்காராதிபி:	இடம்பம் ஆணவ முதலிய [வைகளுடன்
அசம்ப்ருஷ்டசேதா:	கூடாத மனமுடைய [வனும்
வர்ததே	இருக்கின்ற
ஏவமுக்தலட்சணோ ய:	இவ்விதங் கூறிய இலட் [சணமுடையவன் எவனோ
ஸ ஏவ	அவனே
ப்ராஹ்மண இதி	பிராமணன் என்று
ஸ்ருதி ஸ்ம்ருதி	சுருதி மிருதி
புராணேதிஹாசாநாம்	புராண இதிகாசங்களின்
அபிப்ராய:	கருத்து
அந்யதாஹி	வேறு வகையாலே
ப்ராஹ்மணத்வ சித்தி:	பிராமணத் தன்மை பெறப் [படுமென்பதே
நாஸ்த்யேவ.	இல்லை.

பொழிப்புரை

மேற்கூறியவைகள் பிராமணத்தன்மையன்று மெனின்? மற்று; பிராமணன் என்பவன் யாவன் எனில்? அத்துவிதமும், சாதி குணக்கிரியையற்றதும்; இன்ப துன்ப முதலிய ஆறுஅலை களற்றதும்; பிறப்பு முதலிய ஆறு விகாரங்களின்றியதும்; விடயமாந்தன்மை முதலிய தோஷங்கள் அற்றதும்; சத்து, சித்து, ஆனந்தம், அனந்தவடிவும்; உண்மையாய் விகற்ப மற்றதும்; கற்பனையனைத்திற்கும் ஆதாரமும்; எல்லாப் பூதங்களில் உள்ளீடாய் இருக்கின்றதும்; உள்ளும் புறம்பும் ஆகாசத்தைப் போன்று நிறைந் திருப்பதும்; நீக்கமிலா இன்ப இயல்பினதும்; பிரமாணத்தால் உணரப்படாததும்; அநுபவத்தினு லேயே அறிதற்குரியதும்; அபரோட்சமாய் விளங்கு வதுமாகிய ஆன்மாவை, நேரே உள்ளங்கை நெல்லிக் கனி போலுணர்ந்து செய்தவற்றின் பயன் வந்தமை யால், காமி முதலிய தோடமற்று, சமதம முதலிய பெற்று, வேட்கை, பற்று முதலிய வொழிந்து, டம்பம் ஆணவமென்பது முதலிய சேராத மனமுடைமை என்னும் இவ்விலக்கணத்தை யுடையவன் எவனோ, அவனே பிராமணன் என்பது வேதாகமபுராண இதிகாச முதலிய எல்லா நூல்களின் கருத்து. வேறுவகையால் பிராமணத் தன்மை சித்திக்கவே மாட்டாது. (10)

வாக்கிய
எண்.

11. சச்சிதானந்தமாத்மாநம் அத்விதீயம் ப்ரஹ்ம பாவயேத் ஆத்மாநம் சச்சிதானந்தம் ப்ரஹ்ம பாவயேத் இத்யுபநிஷத்.

பதவுரை

சச்சிதானந்தம்	சச்சிதானந்தமாகிய
ஆத்மானம்	ஆன்மாவை
அத்விதீயம்	அத்துவிதமாகிய
ப்ரஹ்ம பாவயேத்	பிரமமாய்ப் பாவிக்கவும்
ஆத்மாநம்	ஆன்மாவை
சச்சிதானந்தம்	சச்சிதானந்தமாகிய
ப்ரஹ்மபாவயேத்	பிரமமாய்ப் பாவிக்கவும்
இத் யுபநிஷத்.	உபநிடதம் முற்றும்.


ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

பொழிப்புரை

உண்மையறிவானந்த வடிவ ஆன்மாவை அத்துவிதப் பிரமமாகப் பாவித்தல் வேண்டும்; ஆன்மாவை சச்சிதானந்த பிரமமாகப் பாவித்தல் வேண்டும். (11)

இவ்வாறு வச்சிர சூசிகை உபநிடதம் முற்றும்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]


[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]


கோவிலூர் ஆண்டவர்
A. No. 1663
R65,0
நூலகம், கோவிலூர்

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA